# 1 இறைவாக்கும் இயேசுவின் பிறப்பும்

**கடவுள் மக்களுக்கு தமது செய்தியைக் கொடுப்பதற்கு வெவ்வேறு காலங்களில் சிலரைத் தெரிவுசெய்தார். இறைவாக்கினர்கள் என்று அழைக்கப்பட்ட அவர்கள் மக்களுக்கு கொடுத்த இறைவாக்கில் எதிர்காலத்தைக் குறித்த முன்னுரைப்பும் காணப்பட்டது.**

**எசாயா** 7:14, 11:1, 9:2, 6, 7, **மீக்கா** 5:2

| ***இறைவாக்கினர் என்போர்,*** | ***இறைவாக்குப் பணிஎன்பது,*** |
| --- | --- |
| *இறைவனால் அழைக்கப்பட்டு இறை ஏவுதலால் வெளிப்படுத்தப்பட்ட இறை செய்தியை மக்களுக்கு அறிவிப்பவர்களாவார்.* | *இறைமக்கள் கடவுளைவிட்டு தூரச் சென்று தீயவாழ்வை வாழும்போது, அவ்வாறான தீமைக்கு காரணமானவற்றை ஆராய்ந்து பார்த்து, தீமையிலிருந்து மக்களைக் காப்பாற்றி, மீண்டும் இறைவனிடம் கொண்டுவருதலாகும்.* |

*எதிர்வு கூறல் எனப்படும் இறைவாக்குரைத்தல் மூலம், இயேசுகிறிஸ்துவின் பிறப்பிற்கு பலவருடங்களுக்கு முன்னரே அப்பிறப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.*

*ஆன்மீக ரீதியிலும் சமூக ரீதியிலும் மக்கள் பல துன்பங்களை எதிர்நோக்கிய காலத்தில் இயேசுவின் பிறப்புபற்றிய இறைவாக்கு இறைவாக்குரைப்போரால் அறிவிக்கப்பட்டது.*

***அவ்வாறான சில இறைவாக்குகளாவன,***

**ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார், அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்'என்று பெயரிடுவார்.**
**எசாயா** 7:14

**இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்.**
**மத்தேயு** 1:22-23

*மரியா என்னும் ஆசிர்பெற்ற பெண் கருத்தரித்து குமாரனைப் பெற்றெடுத்தல், இயேசு பிறப்பதற்கு பலவருடங்களுக்கு முன்னரே கூறப்பட்ட இறைவாக்கின் நிறைவேற்றமாகும். அவ்வாறு பிறக்கும் குழந்தைக்கு ''இம்மானுவேல்'' என்று பெயரிடுமாறு கூறப்பட்டது. இம்மானுவேல் என்பதன் பொருள் ''கடவுள் நம்முடன் இருக்கின்றார்'' என்பதாகும். இயேசுவின் இவ்வாறான பிறப்பு முழு மனுக்குலுத்திற்குமே நற்செய்தியாகும். அது மாத்திரமல்ல இரட்சிப்பைப் பெற்றுத்தரும் இறை செயற்பாடுமாகும்.*

**ஈசாய் என்னும்**
**அடிமரத்திலிருந்து தளிர்**
**ஒன்று துளிர்விடும், அதன்**
**வேர்களிலிருந்து கிளை ஒன்று**
**வளர்ந்து கனிதரும்.**
**எசாயா** 11:1

**அவர் பெரியவராயிருப்பார், உன்னத**
**கடவுளின் மகன் எனப்படுவார்.**
**அவருடைய தந்தை தாவீதின்**
**அரியணையை ஆண்டவராகிய**
**கடவுள் அவருக்கு அளிப்பார்.**
**லூக்கா** 1:32

*கடவுள் தாவீதுக்கு கொடுத்த வாக்குறுதியானது இந்த இறைவாக்கின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. அன்றைய யூதேய நாட்டில், பெத்தலகேம் என்னும் தாவீதின் நகரத்தில், தாவீதின் வம்சத்தில் நிகழ்ந்த இயேசுவின் பிறப்பு அந்த இறைவாக்கின் நிறைவேற்றமாகும். இறைவனின் திட்டம் ஆரம்பத்தில் இருந்தே செயல்பட்டது என்பதையும் அது நிறைவேறியது என்பதையும் இயேசுவின் பிறப்பு எடுத்துக் காண்பிக்கின்றது.*

**காரிருளில் நடந்துவந்த மக்கள்**
**பேரொளியைக் கண்டார்கள்,**
**சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில்**
**குடியிருப்போர் மேல் சுடர் ஒளி**
**உதித்துள்ளது.**
**எசாயா** 9:2

**காரிருளில் இருந்த மக்கள்**
**பேரொளியைக் கண்டார்கள்.**
**சாவின் நிழல் சூழ்ந்துள்ள**
**நாட்டில் குடியிருப்போர் மேல்**
**சுடரொளி உதித்துள்ளது.**
**மத்தேயு** 4:16

**இருளிலும் இறப்பின் பிடியிலும்**
**இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய**
**கால்களை அமைதிவழியில்**
**நடக்கச் செய்யவும் நம் கடவுளின்**
**பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும்**
**விண்ணிலிருந்து விடியல் நம்மைத்**
**தேடிவருகிறது.**
**லூக்கா** 1:79

*இயேசுவின் பிறப்பின்போது யூதமக்கள் ஏழ்மை என்னும் இருளால் சூழப்பட்டு இருந்தனர். நீண்ட நாட்களாக வேறு பேரரசுகளின் ஆட்சிக்குட்பட்டு இருந்ததன் விளைவாக ஏழ்மையும் விரக்தியும் வளர்ந்து மக்கள் பெரும் இன்னல்களை சந்தித்துக்கொண்டு இருந்தனர். மேலும் பெண்கள், சிறுவர்கள், நோயுற்றோர்,*

*வயோதிபர், பிற இனத்தவர் ஆகியோர் சமூகத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தனர். அதனால் அவர்களும் பல இன்னல்களை சந்தித்தனர். இவ்வாறாக ''இருள் சூழ்ந்த தேசத்தில்'' வாழ்ந்தவர்களுக்கு ஒரு பேரொளியாக இயேசு வாழ்ந்தார். அதன் மூலம் இறைவாக்கினரின் முன்னுரைப்பு நிறைவேறிற்று.*

**ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார், ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார், ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும், அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்.**
**எசாயா** 9:6

**இதோ, கருவுற்று ஒருமகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்.**
**லூக்கா** 1:31-32

*வரப்போகின்றவரின் மேன்மையைக் குறித்து முன்னுரைக்கப்பட்ட ஏசாயா இறைவாக்கினரின் வாக்கு, பின்னர் இயேசுவின் பிறப்பைக் குறித்து வானதூதர் மரியாவுக்கு கொடுத்த அறிவித்தலில் உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே இயேசுவின் வாழ்வின் முன்மாதிரியிலும் பணியிலும் இந்த இறைவாக்கு பொருள் உள்ளதாக்கப்பட்டது.*

**நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலைபெயராது உறுதிப்படுத்துவார்,**
**எசாயா** 9:7

**அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சிசெலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது.**
**லூக்கா** 1:33

*இதற்கமைய வருகின்றவரின் அரசில் காணப்படும் விழுமியங்கள் (பெறுமதிகள்) இயேசுவின் குணாதிசயங்களில் வெளிப்படுத்தப்படும். நீதியும் நேர்மையும் அவற்றுள் பிரதானமானவையாகும். அவர் அனைத்து மக்களின் அரசனாக இருப்பது அதிகாரத்தினால் அல்ல, மாறாக நீதியினால். அனைவரினதும் ஆலோசகராக அவர் அமைவது நேர்மையினால். இவ்வாறாக அவர் உலகில் அமைதியின் குமாரனாக என்றென்றும் விளங்குவார்.*

**நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய்! ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார், அவர் தோன்றும் வழி மரபோ ஊழிக்காலமாய் உள்ளதாகும்.**
**மீக்கா** 5:2

**ஆக மொத்தம் ஆபிரகாம் முதல் தாவீதுவரை தலைமுறைகள் பதினான்கு. தாவீது முதல் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டவர்கள் வரை தலைமுறைகள் பதினான்கு. பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டவர்கள் முதல் கிறிஸ்துவரை தலைமுறைகள் பதினான்கு.**
**மத்தேயு** 1:17

மீக்கா இறைவாக்கினரின் இந்த இறைவாக்கு இஸ்ரயேலரை ஆட்சி செய்ய வருபவரின் பிறப்பைக் குறித்தும் அவருடைய சந்ததியைக் குறித்ததுமாகும். அதற்கமைய இஸ்ரயேல் என்று அழைக்கப்பட்ட யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்த, இறைவனால் தெரிவு செய்யப்பட்ட மக்களில் இருந்து ஆளுகை செய்ய ஒருவர் தோன்றுவார் என்று எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் விதத்தில் இயேசுவின் பிறப்பு நடைபெற்றது. இவ்வாறாக இறை திட்டத்தை நிறைவேற்றிய இயேசுவின் பிறப்பின் மூலம் இஸ்ரயேல் மாத்திரமல்ல முழு மனுக்குலமும் விடுதலையைப் பெறவும் அதன் மூலம் புதிய உலகை அமைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

**செயற்பாடு**

1. இறைவாக்கினர்களின் செயற்பாட்டை விளக்குக.

2. இறைவாக்கினர்கள் முன்னுரைத்த
   i) இயேசுவின் பிறப்பு
   ii) இயேசுவின் பணி என்பவற்றை விளக்குக.